Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
DOI :

# திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடு

முனைவர்.க.கமலா,

Date of submission : 20-04-2026 Date of acceptance : 24-04-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name :Dr.S.Priya
Email : spriya.sl@vistas.ac.in
Pages : 35 - 37

## முன்னுரை

முருகப் பெருமானது ஆறுபடை வீடுகளுள் திருப்பரங்குன்றம், திருஏரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய திருத்தலங்களில் முருகப்பெருமானைச் சூரரமகளிர், பேய்மகளிர், அந்தணர், மக்கள் வணங்கி வழிபாடியற்றிய முறைகளைத் திருமுருகாற்றுப்படை பதிவுசெய்து ஆவணப்படுத்தியிருக்கிறது அவ்வழி பாட்டுமுறைகளையும் அவற்றில் காணப்பெறும் சிறப்புக் கூறுகளையும் வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரைஅமைகிறது

1. திருப்பரங்குன்றம் திருப்பரங்குன்றத்தில் இயற்கையான அழகுடைய சூரரமகளிர், பல்வேறு அணிகலன்களை அணிந்து, தங்களை ஒப்பனை செய்து கொண்டு, விளாமரத்தின் சிறிய தளிரைக் கிள்ளி, முருகனை நினைந்து, ஒருவர் மேல் ஒருவர் அத்தளிர் படும்படி விரலால் தெளிக்க, அவை தம் உடலில் பட்டபோது, "அசுரர்களை வென்று, அவர்களைக் கொன்றொழித்து, அவ்வெற்றிக் குறித்துத் தூக்கிய கோழிக் கொடி வாழியபெரிது" என்று வாழ்த்திப் பலரும் ஒன்றாகக் கூடி, மலை இடமெல்லாம் எதிரொலிக்க ஆடிப்பாடினர் என்பதை,

**"கோழி ஓங்கிய வென்றுஅடு விறற்கொடி**
**வாழிய பெரிது! என்றுஏத்தி, பலர்உடன்**
**சீர்திகழ் சிலம்புஅகம் சிலம்பப் பாடி**
**சூரா மகளிர் ஆடும் சோலை**

எனும்அடிகள்உணர்த்துகின்றன.

**பேய்மகளிரின்துணங்கைக்கூத்து**

துணங்கைக் கூத்து என்பது முடக்கிய கைகளையும் விலாப்புடைகளில் ஏற்றியடித்துக் கொண்டு அசைந்தாடும் ஒருவகைக் கூத்து ஆகும் (தமிழ்ப் பேரகராதி தொகுதி 4. ப. 1963)

திவாகர நிகண்டு இதனை,

**"பழுப்புடைஇருகைமுடக்கியடிக்கத்**
**துடக்கிய நடையது துணங்கையாகும்" (தி.நிகண்டு 9 )**

என்று கூறுகிறது இக்கூத்து 'சிங்கிக் கூத்து எனவும் குறிப்பிடப்படுகிறது.

**"கொன்றுதோளோச்சியவென்றாடுதுணங்கை (பதிற்று. 77)**

என்றும் துணங்கையில் ஈடுபாடு கொண்ட கொற்றவையை துணங்கையர் செல்வி என்றும் பதிற்றுப்பத்து அடிகள் குறிப்பிடுகின்றன மன்னர்களும் துணங்கைக் கூத்திற் முதலிடம் தந்தனர் 'தலைக்கை தருதல் என்ற குறிப்பும் காணப்படுகிறது. திருவிழா, போர், வெற்றி முதல் காலங்களில் ஆடப்படுகிறது மகளிர் ஆடவரைத் தழுவியாடுவது என்று மதுரைக்காஞ்சியும் இதனைக் குறிப்பிடுகின்றது. இக்கூத்தினை,

**"மகளிர் தழீஇய துணங்கையானும்" (குறுந் 37 என்று குறுந்தொகையும்,**
**"கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்"(பதிற் 13) என்று பதிற்றுப்பத்தும் கூறுகின்றன.**

அழகெல்லாம் திரண்டு நின்ற கோலமுடைய சூராமகளிர்க்கு, நேர் முரணான அழகின் மையெலாம் திரண்டு நின்ற கோலமுடைய பேய் மகளானவள் முருகனையும். வெற்றி மிக்க போர்க் களத்தையும் பாடி, துணங்கைக் கூத்தாடுகின்றாள்.

**முனைவர்.க.கமலா பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்,**
**சென்னை - 600 117.**

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
DOI :

முருகன் அசுரரைக் கொன்றழித்த போர்க்களத்தில் பேய் மகள் கண்டார் அஞ்சும் **கோர உருவத்துடன், இறந்த உடலின் தலையைத் தன் பெரியகையில் ஏந்திக் கொண்டும்** அதிலுள்ள கண்களைத் தோண்டி உண்டும், அசுரர்கட்டு அச்சம் தோன்றும் வகையில், வெற்றி மிக்க அப்போர்க்களத்தைத் தன் நிணம் தின்னும் வாயினால் பாடியும், தன் தோளை அசைத்தும் துணங்கைக் கூத்தாடி முருகனை வழிபடுகிறாள் (திருமுருகு 52:55)

**2. திருஏரகம்**

**அந்தணர் வழிபாடு**

அந்தணர் என்போர். ஓதல் முதலிய அறுவகைத் தொழில்களை வழுவாமல் செய்பவர்கள்; உலகத்தார் மதிக்கின்ற பல்வேறு பழங்குடிப் பிறப்புடையவர்கள்; நாற்பத்தெட்டு ஆண்டுகள் தம் இளமைக் காலம் முழுவதும் வேதம் கூறும் வழியில் பிரமசரியத்தைக் கைக்கொண்டவர்கள்; ஆகவனீயம், தட்சிணாக்கினி, காருகபத்தியம் என்ற மூன்று வகைத் தீயால் உண்டாகிய செல்வத்தை உடையவர்கள் பூணூற் சடங்கிற்கு முன் ஒரு பிறப்பும். அதன் பின் ஒரு பிறப்பும் ஆகிய இரு பிறப்பினை உடையவர்கள் இத்தகைய இயல்புகளைக் கொண்ட அந்தணர்கள். தாங்கள் வழி படவேண்டிய உதயகாலம், மத்தியானகாலம், அத்தமன காலம் எனும் முக்காலமும் அறிந்து, பூணூலையும், நீர் உலராத ஈர ஆடையை அணிந்து கொண்டும், தலை மேல் குவித்த கையினராய் முருகப்பெருமானைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கின்றனர் (திருமுருகு 177-185)

ஆறு எழுத்துக்களைக் கொண்ட, பெறுதற்கு அருமையான 'சரவணபவ எனும் வேதமந்திரத்தை நாக்கு மட்டும் அசையும் அளவில் பயிலும் படி பல முறை ஒலிக்கின்றனர். பின்னர், நறுமண மிக்க மலர்களை எடுத்துத் தூவி வழிபடுகின்றனர் முருகப்பெருமான் அதற்கு மிகவும் மகிழ்ந்து திருஏரகம் எனும் தலத்தின் கண் எழுந்தருளுகிறான் (திருமுருகு.186-189) என்பதனை,

ஆறு எழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப்பாடி, விரைஉறு நறுமல ர்ஏற்றி

**எனும் அடிகள் உணர்த்துகின்றன.**

**குன்றுதோறாடல்குரவைக்கூத்து**

**குரவை என்பது ஒருவகைக் கூத்தாகும் இந்து எழுவரேனும், எண்மரேனும்,** ஒன்பதின்மரேனும் கைகோர்த்து ஆடும் கூத்து என்பர் வரிக் கூத்துள் ஓர் உறுப்பென்றும், வினோதக் கூத்து ஆறனுள் ஒன்று என்றும் கூறுவர். இக்கூத்து தமிழகத்தில் பண்டைக் காலத்தில் பெருங்செல்வாக்குப் பெற்றிருந்தது. இலக்கியங்களில் இக்கூத்துதான் மிகுதியாக வரும் கூத்துஎனலாம்.

முல்லை அல்லது குறிஞ்சி நிலமக்கள் தம்முள் கைகோர்த்தாடும் கூத்துவகை (தமிழ்ப் பேரகராதி, தொகுதி 2. ப 1012) என்று தமிழ்ப் பேரகராதியும், அழகிய தாளக் கட்டிற்கு ஏற்ப ஆடும் கூத்து என்று மதுரைக்காஞ்சியும் கூறுகின்றன.

போர்க்களத்தில் வாகை சூடியவீரர்கள் வெற்றிவிழாக் கொண்டாடுகின்றனர். பாணரும் கூத்தரும் தமது ஆடல்பாடல்களாலும் இன்னிசைக் கருவிகளாலும் வீரர்களை மகிழ்விக்கின்றனர் அரசனும் வெற்றிக் களிப்பில் தன்னை மறந்து வீரர்களுடன் குரவைக் கூத்தாடுகின்றான் (பதிற் 56) இதனால் மன்னரையும் மயங்கி ஆடச் செய்வது குரவைக் கூத்து என அறிய முடிகிறது. வெற்றியைக் கொண்டாடும் மகிழ்வில் தோன்றிய களிப்புத்துள்ளலே நாளடைவில் குரவைக்கூத்தாக வளர்ந்திருக்கலாம்.

முருகனைப் பூசை செய்யும் வேலன், பச்சிலைக் கொடியால் சாதிக்காயை இடையிடையே சேர்த்து, அதனோடு, தக்கோலக் காயையும் கலந்து, காட்டு மல்லிகையுடன் வெண்டாளிப்பூவையும் சேர்த்துக் கட்டிய தலைமாலையை உடையவன் வேலன் இவ்வாறு நிற்க குறவர்கள் தம் மார்பில் நல்ல நறுமணம் மிக்க சந்தனத்தைப் பூசிக்கொண்டும், நீண்ட மூங்கிற் குழாயில் தேனைப் பெய்து முதிர் வித்துச் சமைத்த கள்ளின் தெளிவைத் தம் சுற்றத்தாருடன் உண்டு மகிழ்ந்து, தங்கள் குறிஞ்சி நிலத்திற்குரிய 'தொண்டகம் எனும் சிறிய வாத்தியத்தை அடித்து, அதனது தாளத்திற்கு ஏற்பக் குரவைக் கூத்தை ஆடுகின்றனர். அதனைக் கண்டுகளிக்க

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
DOI :

முருகப்பெருமான் எழுந்தருளுகின்றான் (திருமுருகு 190-197) என்பதை,
“குன்றகச் சிறுகுடிக்கிளையுடன் மகிழ்ந்து, தொண்டகச் சிறுபறைக் குரவைஅயர"
(திருமுருகு. 196-197) எனும்அடிகள் இயம்புகின்றன.

**4. பழமுதிர்சோலை**

வெறியயர் களன் என்பது, வேலன், முருகப்பெருமானுக்குக் களனிழைத்து, வெறியாட்டயரும் இடம் ஆகும். பண்டைக்கால மக்கள் தமக்கு உடல்நலம் இல்லாத வழியோ, பிறகுறைகள் உண்டான போதோ, வேலன் கட்டுவிச்சி முதலியோரிடத்துக் குறிகேட்டல் வழக்கம்: அவர் 'இக்குறைதெய்வத்தான் நேர்ந்தது என்று கூறினாலும் அல்லது தெய்வத்திற்கு வெறியாட்டு அயர்ந்தால் தாம் உற்றதுயர் நீங்கும் என்று கருதினாலும், எதிர்காலத்தே நிகழப் போவதனை முன்னரே அறிந்து கொள்ள விரும்பினாலும், அவ்வழி முருகப்பெருமானுக்கு வேலனைக் கொண்டு களன் இழைத்து, சிறிய தினை அரிசியைப் பூக்களோடு கலந்து, மறியறுத்து, மலர் சிதறி நறுமணப்புகை, சந்தனம் முதலியன கொடுத்து, வழிபாடுசெய்வர். அங்ஙனம் செய்யுங்கால், முருகப்பெருமான், அவ்வேலன் மேல் எழுந்தருளி ஆவணக் கூறி அவர் குறையைப் போக்குவது வழக்கமாகும் (திருமுருகு 218-226)

**முடிவுரை**

திருப்பரங்குன்றத்தில் சூரர மகளிர் விளவின்தளிரை ஒருவர் மீது ஒருவர் தெளித்து, கோழிக் கொடியை வாழ்த்தி, ஆடிப் பாடியதையும், பேய்மகளிர் துணங்கைக் கூத்தாடி வழிபாடியற்றியதையும், திருஏரகத்தில் அந்தணர் ஈரம் உலராத ஆடையுடன் 'சரவணபவ மந்திரத்தைப் பலமுறை ஓதி வழி பாடியற்றியதையும், குன்றுதோறாடலில் வேலன்தன் சுற்றத்தினருடன் குரவைக் கூத்தாடி வழிபட்டதையும், பழமுதிர் சோலையில் வேலன் வெறியாட்டயர்ந்து, மறியறுத்து, மலர் சிதறி வழிபட்டதையும் திருமுருகாற்றுப்படை பதிவு செய்து ஆவணப்படுத்தியிருக்கிறது.

-------------------------------------